# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 21 புதன்கிழமை 04.06.2025 கதிர் 215



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel







## “நிலம் எங்கள் அடையாளம்! அதனைப் பறிக்க முடியாது!!”

### யாழ். பல்கலைக்கழக சமூகம் பெரும் போராட்டம்



யாழ்ப்பாணம், ஜூன் 4

முல்லைத்தீவு, குருந்தூர்மலையில் கைது செய்யப்பட்ட தமிழ் விவசாயிகளை உடனடியாக விடுதலை செய்யக் கோரியும், தொல்லியில் ரீதியான ஆக்கிரமிப்புக்களை உடன் நிறுத்துமாறு வலியுறுத்தியும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமூகத்தினரால் இன்று

7➤

# உங்களின் பதவிகளுக்காக தமிழ் மக்களை விற்காதீர்கள்

### தந்தை செல்வா காட்டிய தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஒன்றிணையுமாறு தமிழரசுக் கட்சிக்கு சங்கரி அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 4

உங்களது பதவிகளுக்காகத் தமிழ் மக்களை விற்கா தீர்கள் எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

யாழ் . ஊடக அமையத்தில் இன்று புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தந்தை செல்வா, ஜி.ஜி.பொன்னம்பலம், தொண்டமான் உள்ளிட்டவர்கள் உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி இன்றும் இருக்கின்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியும் நானும் உயிரோடு இருக்கின்றோம்.

7➤



## வவுனியாவில் இளம் குடும்பஸ்தர் இரத்தக்கறைகளுடன் சடலமாக மீட்பு

வவுனியா, ஜூன் 4

வவுனியா, காத்தார்சின்னக் குளத்தில் உள்ள வீடொன்றிலிருந்து இரத்தக்கறைகளுடன் இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலத்தைப் பொலிஸார் இன்று புதன்கிழமை மீட்டுள்ளனர்.

வீடொன்றில் ஆண் ஒருவரின் சடலம் இருப்பதாகப்

7➤



### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில்

## செம்மணியில் நாளை போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் சர்வதேச மேற்பார்வையுடன் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் நாளை வியாழக்கிழமை போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோ ரின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை காலை 10 மணியளவில் செம்மணிப் பகுதியில்

7➤





## மனைவியைக் கழுத்து வெட்டிக் கொலை செய்தமை ஏன்? பொலிஸாரிடம் கணவன் பல்வேறு அதிர்ச்சித் தகவல்கள்

வவுனியா, ஜூன் 4

வவுனியாவில் ஆசிரியையான 32 இளம் குடும்பப் பெண் கணவனால் கழுத்து வெட்டிக் கொல்லப்பட்டமைக்கான காரணம் வெளியாகியுள்ளது.

தனது மனைவியைக் கழுத்து வெட்டிக் கொலை செய்த கணவன், மனைவியின் தலையுடன் புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த கொடூர சம்பவம் நேற்று இடம் பெற்றிருந்தது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட 35 வயதான யாழ்ப்பாணம், மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த சுகிர்தரன் என்ற இளம் குடும்பஸ்தரான மரணமடைந்த பெண்ணின் கணவன் வழங்கிய வாக்குமூலத்தில் பல்வேறு அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுவர்ணலதா என்ற 32 வயதான நைனாமடு அரச பாடசாலையில் ஆரம்பப் பிரிவு ஆசிரியரான இவர் கணவனால் கொலை செய்யப்பட்டமைக்குப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டு வந்த போதிலும் கணவனால் புளியங்குளம்

7➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# மீன்களின் விலைகள் எகிறின



கொழும்பு, ஜூன் .04

மீன்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதால் தாங்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

மே மாதம் முதல் இருந்தே மீன்களின் விலைகள் அதிகரித்துள்ளது. இதனால், மீன்களை கொள்வனவு செய்வோரின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது என மீன் வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

ஹட்டனில், தலபத். கொப்பரா ஆகிய மீன்களின் ஒரு கிலோ கிராமுக்கான சில்லறை விலை, 3,200 ரூபாய் முலை 3,400 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றது. தோரா 3,800 ரூபாய், கெலவல்லா 2,900 ரூபாய், பலயா 1,800 ரூபாய், பரவு 2,000 முதல் 2,200 ரூபாய் வரை. லின்னா 1,300 ரூபாய், சாலையோ 900 ரூபாய், பியா மெஸ்ஸன் 900 ரூபாய் உருலோ 1,700 ரூபாய், நெத்தலி மீன் 700 ரூபாய், இறால் 2,400 ரூபாய். ஆகிய விலையில் விற்பனை செய்யப்படுகின்றது,

தற்போதைய மோசமான வானிலை மற்றும் பருவமழை காரணமாக கடல் கொந்தளிப்பாக இருப்பதாகவும் அதிகமான மீனவர்கள் கடலுக்குச் செல்வதில்லை என்றும், இதன் விளைவாக தேவையை பூர்த்தி செய்யும் அளவுக்கு மீன்கள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். மீன் விலை உயர்வு இன்னும் பல நாட்களுக்கு தொடரும் என்றும், இதற்கு இணையாக குளத்து மீன்களின் விலையும் அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். (ஐ)

# 90,000க்கும் மேற்பட்டோர் விண்ணப்பம்




கொழும்பு, ஜூன் .04

அண்மையில் வெளியான உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில், இந்த ஆண்டு பல்கலைக்கழக சேர்க்கைக்காக சுமார் 90,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒன்லைனில் பதிவு செய்துள்ளதாக இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பதிவு காலம் மே 30 ஆம் திகதியுடன் அதிகாரப்பூர்வமாக முடிந்துள்ளது.

இருப்பினும், ஏற்கெனவே பதிவு செய்த மாணவர்கள் ஜூன் 13ஆம் திகதி வரை தங்கள் விருப்ப வரிசையை மாற்றிக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்.

இந்த சரிசெய்தலை ருபுஊ வலைத்தளம் வழியாகச் செய்யலாம்.

தங்கள் விருப்பங்களைத் திருத்திக் கொள்ளும் மாணவர்கள் தங்கள் புதுப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் நகலை பதிவுத் தபால் மூலம் UGCக்கு அனுப்ப வேண்டும் என்றும் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

(ஐ)

# 11 பாடசாலைகளின் மீள் கட்டுமான பணிகளை ஆரம்பிக்க அனுமதி

கொழும்பு, ஜூன் .04

வன்னி மாவட்டத்தில் இடை நிறுத்தப்பட்டிருந்த 11 பாடசாலைகளின் மீள் கட்டுமான பணிகளை மேற்கொள்ள கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக இலங்கை தொழிலாளர் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் புதன்கிழமை (04) தெரிவித்தார்.

பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் கல்வி அமைச்சு தொடர்பான பாராளுமன்ற ஆலோசனைக் குழு கூட்டத்தின் போதே குறித்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ மீள்குடியேற்ற செயலணி ஊடாக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டு இடை நிறுத்தப்பட்டிருந்த வன்னி மாவட்டத்தில் உள்ள 11 பாடசாலைகளின் மீள் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிக்குமாறு கல்வி அமைச்சரிடம் நான் கோரிக்கையை முன் வைத்திருந்தேன்.

இதன்போது எனது கோரிக்கையை ஏற்று அதற்கான நிதி ஏற்பாடுகளை செய்து தருவதாக உறுதியளித்துள்ளார்.

இதன் மூலம் வன்னி மாவட்டத்தில் 11 பாடசாலைகளின் கட்டுமானப் பணிகள் மீள இடம்பெற்று மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருக்கும் ” என தெரிவித்தார்.

(ஐ)



# ஜனாதிபதி நிதியம் வடக்கிற்கு




கொழும்பு, ஜூன் .04

பிரதேச செயலகங்களுக்கு ஜனாதிபதி நிதியத்தின் செயல்பாடுகள் விரிவாக்கப்பட்டதன் மூலம், அதில் கோரப்படும்மருத்துவ உதவிக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன.

அதே நேரத்தில், புதிய கணினி அடிப்படையிலான(முடெநைெ ஞலளவநஅ) குறித்து பிரதேச செயலகங்களின் உரிய விடயத்துடன் தொடர்புடைய ஊழியர்களுக்கு தெளிவூட்டுவதும் பயிற்சி அளிப்பதும் அவசியமாகியுள்ளது.

அதன் ஒரு அங்கமாக, வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியாமாவட்டங்களின் பிரதேச செயலாளர்கள் மற்றும்ஜனாதிபதி நிதியம் தொடர்பாக செயலாற்றும் அதிகாரிகளுக்கு 2025.06.21 அன்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் பயிற்சி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த திட்டத்தின் மூலம், வடக்கு மாகாணத்தில் ஜனாதிபதி நிதியின் பயனாளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், பயனாளிகளுக்கு உயர்தர சேவையை வழங்கவும், நவீனமயமாக்கப்பட்ட ஆன்லைன் அமைப்புகளை அறிமுகப்படுத்தவும்,மேலும் சேவைகளை விரைவாக வழங்கவும்எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பை மையமாகக் கொண்ட ஒரு குறிப்பிட்ட அளவிலானவர்களுக்கு மட்டும் நன்மைகளை வழங்கிய ஜனாதிபதி நிதியத்தை, நாடு முழுவதும் வாழும் மக்களுக்கு நன்மைகளை வழங்கும் மக்கள் நிதியமாக செயல்படுத்துவதே தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான பணிக்குழுவின் முதன்மையான நோக்கமாகும்.

அந்த நோக்கத்தை அடைய,எதிர்காலத்தில் இது போன்ற பயிற்சித் திட்டங்கள் ஏனைய மாகாணங்களிலும் செயல்படுத்தப்படும். (ஐ)

## KDU சர்வதேச பாதுகாப்பு பல்கலைக்கழகமாக மாற்றப்படும்



கொழும்பு, ஜூன் .04

ஜோன் கொத்தலாவல பாதுகாப்புபல்கலைக்கழகம் சர்வதேச பாதுகாப்பு பல்கலைக ்கழகமாக மாற்றப்பட உள்ளதாக பிரதமர் ஹரிணிஅமரசூரிய புதன் கிழமை அன்று பாராளுமன்றத் தில ்தெரிவித்தார்.

பாராளுமன்றஉறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபிரதமர், ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தை சர்வதேச பாதுகாப்பு பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கான சட்ட சீர்திருத்தங ்களை கொண்டுவர அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகக் கூறினார்.

இந்த, பல்கலைக் கழகத்தை அமைப்பதற்கு நிலத்தை நன்கொடையாக வழங்கிய மறைந்த பிரதமர் ஜோன்கொத்தலாவலவின் விருப்பம் என்றும் அவர் கூறினார்.

“முந்தைய அரசாங்கங ்கள் தங்கள் விருப்பப்படி ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகத்தை வை நடத்தி வந்தனர்,”என்று பிரதமர் மேலும் கூறினார்.

(ஐ)

## அரசின் மெதுவான மூலதனச் செலவு குறித்து எச்சரிக்கிறார் ஹர்ஷ



கொழும்பு, ஜூன் .04

அரசாங்கத்தின் மெதுவான மூலதனச் செலவு குறித்து பொது நிதிக் குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா கவலை எழுப்பியுள்ளார், இது பொருளாதார வளர்ச்சி மற்றும் திட்டமிடப்பட்ட வளர்ச்சி இலக்குகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என்று எச்சரித்துள்ளார்.

டி சில்வாவின் கூற்றுப்படி, இந்த ஆண்டு மூலதனத் திட்டங்களுக்காக அரசாங்கம் ரூ. 1.4 டிரில்லியன் நிதியை ஒதுக்கியுள்ள நிலையில், முதல் நான்கு மாதங்களில் ரூ. 136 பில்லியன் மட்டுமே - 10% க்கும் குறைவான தொகையே செலவிடப்பட்டது.

தாமதத்திற்கு இரண்டு முக்கிய காரணங்களை அவர் மேற்கோள் காட்டினார்: ஆரம்பத்தில் கணக்கெடுப்பு முறையை நம்பியிருப்பது, இது பெரிய திட்டங்களைத்தொடங்கவோ அல்லது டெண்டர்களை விடவோ அரசாங்கத்தின் திறனைக் கட்டுப்படுத்தியது, மற்றும் ஒத்திவைக்கப்பட்ட தேர்தல்கள் காரணமாக உள்ளூர் அரசாங்கங்களுக்கு நிதி வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது.

“தற்போதைய போக்குகள் தொடர்ந்தால், ரூ. 1.4 டிரில்லியனில் ரூ. 1.3 டிரில்லியன் செலவிடப்படாமல் இருக்கலாம்,” என்று அவர் கூறினார்.

எதிர்பார்த்ததை விட அதிகமான வரி வருவாய் முதன்மை இருப்பை சற்று உயர்த்தியிருந்தாலும், மூலதன முதலீட்டின் பற்றாக்குறை பொருளாதார வளர்ச்சியை மெதுவாக்கும் என்றும், கடந்த ஆண்டு காணப்பட்ட 5மூ வளர்ச்சியை 3.2மூ ஆகக் குறைக்கக்கூடும் என்றும் டி சில்வா எச்சரித்தார்.

இலக்கு முதலீடு இல்லாமல், விரும்பிய பொருளாதார மற்றும் சமூக மாற்றத்தை அடைய முடியாது என்று கூறி, அரசாங்கம் அதன் மூலதனச் செலவினத் திட்டங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். (ஐ)

## 366 கிராம் குஷ் உடன் ஒருவர் கைது






கொழும்பு, ஜூன் .04

கட்டுநாயக்க விமான நிலையத்தில் 366 கிராம் குஷ் போதைப்பொருளுடன் ஒரு பெண் கைது செய்யப்பட்டுள்ளார், அதே நேரத்தில் போதைப்பொருள் விற்பனைக்கு உதவிய மற்றும் விற்பனையில் ஈடுபட்ட ஒரு ஆணும் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று விமான நிலைய வருகைப் பகுதியில் நடத்தப்பட்ட சோதனையில், இருவரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் வெல்லம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 31 வயதுடையவர் என்றும், பெண் அங்கொடை பகுதியைச் சேர்ந்த 26 வயதுடையவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. (ஐ)

## VJ விஜய் உள்ளிட்ட குழுவுடன் பிரதி அமைச்சர் சந்திப்பு



கொழும்பு, ஜூன் .04

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் மற்றும் இந்தியாவில் இருந்து வருகை தந்த மருத்துவ துறையை சார்ந்த தொழில் அதிபர்கள், தொழில்நுட்ப துறையை சார்ந்த பொறியியலாளர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்களுக்கிடையிலான விசேட சந்திப்பு கொழும்பில் உள்ள பெருந்தோட்டம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சில் புதன்கிழமை இடம் பெற்றது.

இந்த சந்திப்பின் போது ஊடகத்துறை சார்பாக திரைப்பட நடிகரும் முன்னணி தொகுப்பாளருமான ஏது விஜய் கலந்து கொண்டிருந்தார்.

இச்சந்திப்பில் மருத்துவத்துறை முதலீடுகள் மற்றும் மருத்துவ உதவிகள் தொடர்பாக விசேடமாக கலந்துரையாடப்பட்டதுடன் தமிழ்நாட்டுக்கும் மலையக மக்களுக்கும் இடையிலான ஊடக தொடர்புகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# இந்தியா முழுவதும் 4,302 பேருக்கு கொரோனா தொற்று: 24 மணி நேரத்தில் 7 பேர் பலி

இந்தியாவில் இதுவரை 4,302 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டு உள்ளனர். கடந்த 24 மணி நேரத்தில் 7 பேர் பலியாகி இருக்கின்றனர்.

கொரோனா வைரஸ் தொற்று மீண்டும் பரவி வருகிறது. குறிப்பாக கேரளா, மஹாராஷ்டிரா, மேற்கு வங்கம், தமிழகம் ஆகிய மாநிலங்களில் அதிகம் பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டது கண்டறியப்பட்டு உள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் மஹாராஷ்டிராவில் 4 பேரும், டில்லி, தமிழகம், குஜராத்தில் தலா ஒருவரும் என மொத்தம் 7 பேர் உயிரிழந்துள்ளனர். அதேபோல், 276 பேருக்கு புதிதாக கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் இதுவரை 4,302 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டு உள்ளனர். இதுவரை நாடு முழுவதும் மொத்தம் 44 பேர் உயிரிழந்துள்ளனர்.

இது குறித்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியதாவது: முதியோர், கர்ப்பிணிகள், நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக உள்ளவர்கள் பொது இடங்களுக்குச் செல்லும் போது மாஸ்க் அணிய வேண்டும். கொரோனா பரவலால் பதற்றப்படத் தேவையில்லை. மத்திய அரசு கூறிய அறிவுறுத்தல்களையே நாங்களும் கூறி வருகிறோம், என்றார். (ஐ)



# இரண்டாம் கட்டமாக விருது ஈ.சி.ஆரை விட்டு நகராத விஜய்



*கிழக்கு கடற்கரை சாலையிலேயே விஜய் நிகழ்ச்சிகளை நடத்துவது, சமூக வலைதளங்களில் கிண்டலுக்கு உள்ளாகியுள்ளதால், த.வெ.க.,வினர் விரக்தி அடைந்துள்ளனர்.*

*தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் வீடு மற்றும் கட்சி அலுவலகம், சென்னை கிழக்கு கடற்கரை சாலையை ஒட்டி அமைந்துள்ளது. இதனால், தன் பாதுகாப்பு கருதி, கட்சி நிகழ்ச்சிகளை எல்லாம் அங்கேயே அவர் நடத்தி வருகிறார்.*

*இதற்கு முற்றுப்புள்ளி வைத்து, மாநிலம் முழுதும் அவர் வலம் வந்தால்தான் சட்டசபை தேர்தலுக்கு முன்பாக, மக்களிடம் தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என, அக்கட்சியினர் கருதுகின்றனர்.*

*இந்நிலையில், 10ம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 பொதுத்தேர்வில்வெற்றிபெற்ற மாணவர்களுக்கு, த.வெ.க., சார்பில் விருது வழங்கும் விழா ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.*

*சட்டசபை தொகுதிவாரியாக மாணவர்களை தேர்வு செய்து, அவர்களுக்கு விருது மற்றும் விருந்தளித்து, விஜய் வாழ்த்தி வருகிறார். முதற்கட்டமாக, 80 தொகுதிகளுக்கான மாணவர்களுக்கு, மே 30ம் தேதி, மாமல்லபுரத்தில் உள்ள தனியார் விடுதியில் விருது வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.*

*இரண்டாம் கட்டமாக, ராமநாதபுரம், ஈரோடு, கரூர், தஞ்சாவூர், தர்மபுரி, திருச்சி, திருநெல்வேலி, திருப்பத்துார், திருப்பூர், திருவாரூர், தென்காசி, மயிலாடுதுறை, விருதுநகர், விழுப்புரம் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்கள், இன்று கவுரவிக்கப்பட உள்ளனர்.*

*மாமல்லபுரத்தில் அதே தனியார் விடுதியில், இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. 'இந்த விழாவை, தென்மாவட்டத்தில் அல்லது டெல்டா மாவட்டத்தில் விஜய் நடத்தி இருந்தால், கட்சிக்கு பெரிய அளவில் விளம்பரம் கிடைத்திருக்கும்.*

*ஆனால், அதை தவிர்த்து, கிழக்கு கடற்கரை சாலையிலேயே விஜய் தொடர்ந்து விழாவை நடத்தி வருவது, கட்சியினர் மத்தியிலும் சோர்வை ஏற்படுத்தி இருக்கிறது' என, த.வெ.க., இரண்டாம் கட்டத் தலைவர்களே வருத்தப்படுகின்றனர்.(ஐ)*



# அதிகாலை பயணத்தால் விபரீதம் மத்திய பிரதேசத்தில் வேன்– லாரி மோதி 9 பேர் பலி

மத்திய பிரதேசத்தில் வேன்- லாரி மோதி ஏற்பட்ட விபத்தில், 9 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த விபத்து அதிகாலை 2.30 மணிக்கு நிகழ்ந்துள்ளது.

மத்தியப் பிரதேச மாநிலத்தில் உள்ள ஜபுவா மாவட்டத்தில் வேன்- லாரி மோதி விபத்து ஏற்பட்டது. திருமணம் நிகழ்ச்சிக்கு சென்று விட்டுவேனில் வீடு திரும்பி கொண்டு இருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த லாரி கட்டுப்பாட்டை இழந்து வேன் மீது மோதி விபத்து ஏற்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார் நீண்ட நேரம் போராடி மீட்பு பணி மேற்கொண்டனர். இந்த விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர். மேலும் 2 பேர் பலத்த காயம் அடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இந்த விபத்து அதிகாலை 2.30 மணிக்கு நிகழ்ந்துள்ளது.

துாக்க கலக்கத்தில் வாகனம் ஓட்டும்போது சற்று கண் அசந்தாலும் பெரும் விபத்து நேரிட்டு விடும். எனவே, இரவு, அதிகாலை நேரங்களில் பயணத்தை தவிர்க்க வேண்டும் என்பதை இந்த சம்பவம் உணர்த்துகிறது. (ஐ)

# பாகிஸ்தானுக்கு உளவு: பஞ்சாப் பிரபல யூடியூபர் ஜஸ்பீர் சிங் கைது



பாகிஸ்தானுக்காக உளவு பார்த்ததாக, பஞ்சாப் யூடியூபர் ஜஸ்பீர் சிங் கைது செய்யப்பட்டார். அவருக்கு ஜோதி மல்ஹோத்ராவுடன் தொடர்பு உள்ளது.

ஹரியானா மாநிலம், ஹிசார் மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஜோதி மல்ஹோத்ரா. யுடியூபில், 'டிராவல் வித் ஜோ' என்ற பெயரில் பயண சேனல் நடத்தி வரும் இவரை, பாகிஸ்தானுக்காக உளவுபார்த்த குற்றச்சாட்டில் ஹரியானா போலீசார் கைது செய்தனர். அவரது லேப்டாப், மொபைல் போன் உள்ளிட்டவற்றை பறிமுதல் செய்து ஆய்வு செய்ததில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில், பாகிஸ்தானுக்காக உளவு பார்த்ததாக, பஞ்சாப் யூடியூபர் ஜஸ்பீர் சிங் கைது செய்யப்பட்டார். இவர் ஜான் மஹால் என்ற சேனலை நடத்தி வருகிறார். இது குறித்து பஞ்சாப் டி.ஜி.பி.,கவுரவ் யாதவ் கூறியதாவது: 'ஜான் மஹால்' என்ற யூடியூப் சேனலை நடத்தும் ஜஸ்பீர் சிங், பாகிஸ்தானுக்காக உளவு பார்த்துள்ளார்.

இவர் பாகிஸ்தான் ராணுவ அதிகாரிகள் மற்றும் பயங்கரவாத அமைப்புகளின் முக்கிய தலைவர்களுடன்தொடர்பில்இருந்தது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அவர் மூன்று முறை (2020, 2021, 2024) பாகிஸ்தானுக்கு பயணம் செய்தார். மேலும் அவரது மொபைல் போனில் பல பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் எண்கள் இருந்தன.

ஜோதி மல்ஹோத்ரா கைது செய்யப்பட்ட பிறகு, ஜஸ்பீர் பாகிஸ்தானுடன் தனது தொடர்புகளின் அனைத்து தடயங்களையும் அழிக்க முயன்றார். இவரிடம் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது. தேசிய பாதுகாப்பைப் பாதுகாப்பதிலும், அத்தகைய தேச விரோத சக்திகளால் ஏற்படும் அனைத்து அச்சுறுத்தல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

# நலம் காப்போம்!






நீர்க்கட்டிகள் என்கிற வார்த்தை வளரிளம் பருவம் முதல் நடுத்தர வயதுடைய பெண்கள் வரை பிரபலம் ஆன ஒரு வார்த்தை. பிரபலமான வார்த்தை என்கிற அதே வேளையில் இந்தப் பெண்களுக்கு உயிரச்சத்தைக் கொடுக்கும் வார்த்தையாகவும் இது உள்ளது. நீர்க்கட்டி வந்தால் அது புற்றுநோய் கட்டியாக மாறிவிடுமோ, நீர்க்கட்டி வந்தால் குழந்தை பிறக்காதோ போன்ற அச்சமே அவர்களின் நிம்மதியைக் கெடுத்து விடுகிறது. இது உளவியல் ரீதியான மன அழுத்தத்தையும் கொடுக்கிறது (நோய் அல்ல. நோய் மீதான பயம்). இந்த அச்சத்தின் பொருட்டே மருத்துவரை நாடிச் செல்லும் பெண்கள் அதிகம்.

நீர்க்கட்டி என்று பொதுவாகச் சொல்லப்படும் பிரச்னை என்பது ˚ஊழுனு ீழுடல உலளவளைஉ ழுயசயைெ னுளைநயளந) என்கிற நோய். இது ஹோர்மோன்கள் உற்பத்தி மற்றும் செயலில் மாற்றத்தை ஏற்படுத்துவதால் நோய் உருவாகிறது.

பெண்களின் கருப்பையில்

(சினைப்பை) ஈஸ்ட்ரோஜன் என்கிற ஹோர்மோன் அதிகம் சுரக்கும். ஆண்ட்ரோஜன் குறைவாகச் சுரக்கும். இது இயல்பு. ஆனால், நீர்க்கட்டிகள் உள்ள பெண்களுக்கு இந்த ஆண்ட்ரோஜன் அளவு அதிகமாக இருக்கும்.

'ஆண்'ட்ரோஜன் 'ஆண்' ஹோர்மோன்கள்.

அதனால் ஆண்ட்ரோஜன் சுரப்பு அதிகமாக உள்ளதால் நீர்க்கட்டிகள் உள்ள பெண்களுக்கு ஆண்களைப் போன்ற உடல்வாகு ஏற்படுகிறது.

உதாரணமாகத் தாடி மீசை வளர்தல், மாத சுழற்சி உதிரப்போக்கு சரியாக வராமல் இருத்தல் போன்றவை.

நீர்க்கட்டி உள்ள பெண்களுக்கு அவர்களின் கணையத்தில் இன்சுலின் சுரப்பு சரியாக இருக்காது. சுரப்பு இருந்தாலும் இன்சுலின் எதிர்ப்பு நிலை என்கிற நிலை ஏற்படும். இந்த இன்சுலின் எதிர்ப்பு நிலை ஏற்படுவதால் பெரும்பாலான பெண்கள் உடல் பருமன் பெறுவர். இயல்பாகவே எல்லாருக்கும் தோலுக்கு அடியில் கொழுப்பு இருக்கும். இது இயற்கை. ஆனால், உடல் பருமன் ஏற்படும் போது தோலுக்கு அடியில் இருக்கும் கொழுப்புப் படலத்தின் தடிமனும் கூடுகிறது.

இது இறுகி கடின தன்மையோடு இருக்கும். இந்தக் கொழுப்பும் ஈஸ்ட்ரோஜன் எனப்படும் பெண் ஹோர்மோனை அதிகமாக வெளியேற்றும். அதனால் ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன்களின் அளவு கணிசமாக கூடுகிறது உடலில்.

இதன் அளவு கூடுவதால் கருப்பையில் கருக்குமிழிகளைத் தூண்டும் ஹோர்மோன் குறைவாகச் சுரக்கிறது.

இதன் விளைவாகக் கருக்குமிழிகள் வளர்ச்சி பெற முடியாமல் போகிறது. கருக்குமிழிகளின் வளர்ச்சி குன்றுவதால் கருமுட்டை வெளிவர முடியாமல் போகிறது.

இதற்கு தீர்வாக

1) உடல் பருமனைக் குறைக்க வேண்டியதும் இன்சுலின் எதிர்ப்பு நிலையைச் சரிசெய்ய வேண்டியதும் முதல் பணி. இன்சுலின் நிலையைச் சரிசெய்யவும் உடல் எடையைக் கட்டுக்கோப்பாக வைத்தல் வேண்டும்.

2) உடற்பயிற்சியும் உணவுக்கட்டுப்பாடும் அவசியம்.

3) கடினமான தேகப் பயிற்சி வேண்டாம். மிதமான நடைப்பயிற்சியைத் தினமும் 40 நிமிடங்கள் மேற்கொண்டால் போதும்.



4) உடல் எடையைக் குறைக்க வேண்டி பட்டினி இருத்தல் கூடாது. உண்டி சுருக்குதல் யாருக்கும் அழகல்ல. உடல் உழைப்பிற்கேற்ற உணவு, உணவிற்கேற்ற உடல் உழைப்பு இதுதான் தாரக மந்திரம்.

5) இதற்கென சில மருந்துகள் உண்டு. மருத்துவரின் நேரடி ஆலோசனைக்குப் பின்பே அவற்றை எடுத்துக்கொள்ள வேண்டும்.

நம்பிக்கை:-

நீர்க்கட்டிகள் எனப்படும் ˚ஊழுனு ஒருபோதும் புற்றுநோயாக மாறாது. அதனால் இது புற்றுநோயாக மாறுமோ என்கிற மனக்கவலை வேண்டாம்.

குழந்தையின்மைக்கு இது ஒரு முக்கியக் காரணமாக இருந்தாலும் இன்றைய அறிவியல் மருத்துவ வளர்ச்சியில் இதற்கான தீர்வுகள் நிறைய உள்ளது. மகப்பேறு மருத்துவரின் ஆலோசனையையும் நவீன மருத்துவ சிகிச்சையையும் பெற்று இந்நிலையில் இருந்து மீள்தல் சாத்தியமே.








# கனடாவில் பயங்கர துப்பாக்கிச்சூடு: ஒருவர் பலி 5 பேர் கவலைக்கிடம்

கனடாவில் மர்மநபர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் 5 பேர் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. கனடா உள்ள டொராண்டோவில் மர்மநபர்கள் திடீரென துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும் 5 பேர் பலத்த காயம் அடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இவர்களது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. நேற்றிரவு 8:40 மணியளவில், யார்க்டேல் அங்காடிக்கு தெற்கே உள்ள ப்ளெமிங்டன் வீதி அருகில் இந்த சம்பவம் நடந்துள்ளது. வன்முறை எதனால் ஏற்பட்டது. துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் யார்? என்ற விவரங்களை போலீசார் வெளியிட மறுத்துவிட்டனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இது குறித்து டொராண்டோ மேயர் ஒலிவியா சோவ் கூறியதாவது: மிக பரபரப்பான இடத்தில் நடந்த துப்பாக்கிச்சூடு சம்பவம் குறித்து தகவல் அறிந்து மிகவும் கவலை அடைந்தேன். சம்பவ இடத்தில் நீண்ட நேரம் போராடி மீட்பு பணி மேற்கொண்ட மீட்பு படையினருக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன், என்றார். (ஐ)

# தென் கொரிய அதிபர் தேர்தல் எதிர்க்கட்சி வேட்பாளர் வெற்றி



ஆசிய நாடான தென் கொரியாவில் நடந்த அதிபர் தேர்தலில், எதிர்க்கட்சியான, லிபரல் கட்சியைச் சேர்ந்த, லீ ஜே மியூங்க், 61, வெற்றி பெற்றார்.

தென் கொரியாவில் அதிபராக இருந்த யூன் சுக் இயோல், கடந்தாண்டு, டிச., 3ல் ராணுவ அவசர நிலையை அறிவித்தார். இதற்கு எதிராக, பார்லிமென்டில் உடனடியாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து, சில மணி நேரங்களில், அந்த உத்தரவை திரும்பப் பெற்றார்.

இதைத்தொடர்ந்து, அவருக்கு எதிராக பார்லிமென்டில் பதவி நீக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டார். இதை அந்த நாட்டின் அரசியல் சாசன நீதிமன்றமும், கடந்த ஏப்.,ல் உறுதி செய்தது. தற்போது அவர் மீது வழக்குகள் நடந்து வருகின்றன.

டிரம்ப் ஆதரவாளர் போலந்து அதிபராக தேர்வு ஐரோப்பிய யூனியனில் இனி 'குடுமிப்பிடி'தான்

வரும், 2027 வரை பதவிக்காலம் உள்ள நிலையில், அதிபர் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டதால், ஆறு மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இதன்படி, தென் கொரியாவில் நேற்று அதிபர் தேர்தலுக்கான ஓட்டுப் பதிவு நடந்தது. பதிவான ஓட்டுகள் உடனடியாக எண்ணப்பட்டன.

இந்தத் தேர்தலில், பரவலாக எதிர்பார்த்தபடி, எதிர்க்கட்சியான, லிபரல் கட்சியின் வேட்பாளர் லீ ஜே மியூங்க் அதிபராக தேர்வு செய்யப்பட்டார்.

அவரை எதிர்த்து போட்டியிட்ட, பழமைவாத கட்சியான மக்கள் சக்தி கட்சியின் கிம் மூன் சூ, தோல்வி அடைந்தார். இந்த தோல்வியை ஒப்புக்கொண்ட அவர், வெற்றி பெற்ற லீ ஜே மியூங்க்கிற்கு வாழ்த்து தெரிவித்தார். இந்த தகவலை அந்நாட்டு ஊடகங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. (ஐ)



# ரஷ்யாவின் 12 கி.மீ. பாலத்தை தகர்த்த உக்ரைன்

ட்ரோன்களை அனுப்பி, ரஷ்யாவின் விமானப்படை தளங்களில் தாக்குதல் நடத்தி, 30 விமானங்களை தகர்த்த உக்ரைன், அடுத்த நடவடிக்கையாக, ரஷ்யாவின் முக்கிய பாலத்தை குண்டுகள் வைத்து தகர்த்துள்ளது.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் மீது, 2022ல் ரஷ்யா தொடர்ந்த போர், மூன்று ஆண்டைக் கடந்தும் தொடர்கிறது.

போர்நிறுத்த பேச்சுகள் தோல்வி அடைந்த நிலையில், ரஷ்யாவின் மீது உக்ரைனின் தாக்குதல் தீவிரமடைந்துள்ளது.

சமீபத்தில், 117 ட்ரோன்களை ரஷ்யாவின் பல பகுதிகளுக்கு அனுப்பி, ஐந்து விமானப்படை தளங்களை குறி வைத்து உக்ரைன் தாக்குதல் நடத்தியது.

இதில், ரஷ்ய விமானப்படையின், 30 போர் விமானங்கள் தகர்க்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இது இந்தப் போரின் மிகப்பெரிய சேதமாகக் கருதப்படுகிறது.

இதற்கிடையே, உக்ரைனிடம் இருந்து, 2014ல் ரஷ்யா கைப்பற்றிய கிரீமியாவையும், ரஷ்யாவையும் இணைக்கும் வகையில், 12 கி.மீ., துார பிரமாண்ட பாலம் உள்ளது.

கிரீமியன் பாலம் என்றும் கெர்ச் பாலம் என்றும் இது அழைக்கப்படுகிறது. இதில், ஒரு பக்கம் ரயில் போக்குவரத்துக்கும், மறுபக்கத்தில் சாலை போக்குவரத்தும் நடந்து வந்தது.

இந்நிலையில், நீருக்கடியில், பாலத்தின் துாண்களின் அடியில் வைக்கப்பட்ட வெடிகுண்டுகளை இயக்கி, உக்ரைனின் உளவு அமைப்பான, எஸ்.பி.யு., நேற்று தாக்குதல் நடத்தியது. இதில், பாலத்தின் பெரும்பகுதி தகர்க்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கடந்த, ஒரு மாதமாக திட்டமிட்டு, இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக, எப்.பி.யு., கூறியுள்ளது. இந்த தாக்குதலுக்கு, 1,100 கிலோ எடையுள்ள வெடிபொருள்கள் பயன்படுத்தப்பட்டதாகவும் அது கூறியுள்ளது.

இந்த தாக்குதலில், பாலம் மட்டுமல்லாமல், அதை தாங்கி நிற்கும் துாண்களும் கடுமையாக சேதமடைந்து உள்ளன. (ஐ)

# நிவாரண முகாம் அருகே இஸ்ரேல் தாக்குதல் 27 பாலஸ்தீனியர்கள் பலி



காசாவின் தெற்கு முனை பகுதியில், நிவாரண பொருட்கள் வழங்கும் இடமருகே இஸ்ரேல் விமானப்படை நடத்திய தாக்குதலில் பாலஸ்தீனத்தை சேர்ந்த 27 பேர் உயிரிழந்தனர்.

இது தொடர்பாக விளக்கமளித்துள்ள இஸ்ரேல் விமானப்படை, குறிப்பிட்ட வழித்தடத்தை தாண்டி வேறு பகுதிகளில் சந்தேகத்திற்கு இடமான வகையில் அவர்கள் சென்றதாகவும், தங்கள் படைகள் அருகே வர வேண்டாம் என்ற எச்சரிக்கையை அவர்கள் பொருட்படுத்தவில்லை என விளக்கமளித்து உள்ளது. என்ன நடந்தது என்பது குறித்து விசாரணை நடப்பதாகவும் தெரிவித்து உள்ளது.

காசாவின் வடக்கு முனையில் நடக்கும் போரில், தங்களது நாட்டை ராணுவத்தைச் சேர்ந்த மூன்று வீரர்கள் கொல்லப்பட்டு உள்ளதாக இஸ்ரேல் தெரிவித்து உள்ளது.

ஆனால், இதனை ஏற்க மறுத்துள்ள ஐ.நா., மனித உரிமைகள் அமைப்பானது, இந்த தாக்குதல் குறித்து பாரபட்சமற்ற முறையில் விசாரணை நடத்த வேண்டும். சாமானிய மக்கள் மீது தாக்குதல் நடத்துவது என்பது சர்வதேச சட்டங்களை மீறிய செயல் எனவும், இது போர் குற்றம் எனவும் தெரிவித்துள்ளது. (ஐ)

## நிலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயில் முன்பாக இன்று நண்பகல் 12 மணியளவில் ஒன்றுகூடிய பல்கலைக்கழகச் சமூகத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, "வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம்", "இந்த மண் எங்களின் சொந்த மண்", "கலாசார அழிப்பை நிறுத்து", "தமிழரின் நிலம் தமிழருக்கே", "நிலம் எங்கள் அடையாளம்! அதனைப் பறிக்க முடியாது!!", "விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள விவசாயிகளை விடுதலை செய்" ஆகிய கோஷங்களைப் போராட்டக்காரர்கள் எழுப்பினர்.

இந்தப் போராட்டத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக ஊழியர்கள், சிவில் சமூகத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

போராட்டத்தின்போது பல்கலைக்கழக நுழைவாயிலில் பொலிஸார் நிறுத்தப்பட்டு கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

கடந்த மே மாதம் 10 ஆம் திகதி குமுழமுனை - தண்ணிமுறிப்பு குளத்தின் கீழான நீர்ப்பாசனத்தின் ஊடாக விவசாயம் செய்யும் நோக்கில் காணியின் உரிமையாளர் தனது பணியாட்களைக் கொண்டு உழவு இயந்திரத்தின் மூலம் குருந்தூர்மலை பகுதியில் விவசாயத்தில் ஈடுபட்டார். இதன்போது தொல்பொருள் தளத்தைச் சேதப்படுத்தியதாகக் கூறி தேரர் ஒருவர் செய்த முறைப்பாட்டுக்கமைய இரண்டு விவசாயிகள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த விவசாயிகளை உடனடியாக விடுதலை செய்யக் கோரியே போராட்டம் நடத்தப்பட்டது.

## மனைவியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸாருக்கு வழங்கப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் தனது மனைவி மூன்று மாதம் கர்ப்பிணியாக இருந்தார் எனவும், அதில் ஏற்பட்ட சந்தேகமே இந்த நிலைமைக்குக் காரணம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தான் கொழும்பில் தங்கியிருந்து கட்டட வேலைகளில் ஈடுபட்டு வருகின்றார் என்று தெரிவித்துள்ள மேற்படி இளம் குடும்பஸ்தர், நீண்ட காலமாக தனக்கும் மனைவிக்கும் இடையில் பல சலசலப்புகள் ஏற்பட்ட நிலையில் கடந்த வியாழக்கிழமை தனது தொலைபேசிக்கு ஒரு 21 வயது இளைஞரால் அனுப்பப்பட்ட புகைப்படங்களால் தனது கோபம் உச்சம் அடைந்த நிலையில் தான் கொழும்பிலிருந்து நொச்சிக்குளம் கிராமத்துக்கு வருகை தந்து தன் மனைவியுடன் பல்வேறு விடயங்களில் கருத்து முரண்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும், இதில் தீர்வு கிடைக்காத நிலையில் தான் கடந்த ஞாயிற்றுக்கிழமை தனது சொந்த ஊரான யாழ்ப்பாணம், மானிப்பாய்க்குச் சென்று பின்னர் திங்கட்கிழமை மீண்டும் வருகை தந்து மனைவியைத் தாய் சேய் பராமரிப்பு நிலையத்துக்கு அழைத்துச் சென்றதாகத் தெரிவித்த அவர், இந்தக் குழந்தைக்குக் காரணம் யார் என்பது தொடர்பில் தனக்கு நீண்ட கால சந்தேகம் ஏற்பட்டு இருந்ததாகவும், இது தொடர்பாக தன் மனைவியிடம் கேட்டதன் பிரகாரம் எவ்விதமான பதிலும் அவர் கூறவில்லை என்றும் கூறியுள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை அவர் அதை ஒத்துக்கொண்டதையடுத்து தனது மனைவியைப் புளியங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்வதாகக் கூறியே அவர் சின்ன பூவரசங்குளம் காட்டுப் பாதையால் அழைத்து வந்திருக்கின்றார் என்றும் தெரிவித்திருந்தார்.

அந்தக் காட்டுப் பாதையின் வழியே 200 மீற்றர் அளவில் சென்றதன் பின்னர் மனைவி ஏன் இந்த வீதியால் செல்கிறீர்கள் எனக் கேட்டபோது, தான் அந்த 21 வயது இளைஞர் இந்தப் பகுதிக்கு வருவதாகவும், இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காண்பதற்காக இங்கே வந்துள்ளோம் என்றும் கூறியதாகப் பொலிஸாரிடம் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் பின்னர் தான் மறைத்து வைத்திருந்த கத்தியின் மூலம் தனது மனைவியை வெட்டியதாகவும், அவர் சிறிது தூரம் ஓடி கீழே விழுந்ததன் பின்னர் தான் மனைவியை மூன்று முறை வெட்டி கழுத்தைத் துண்டாக்கி அதனை அவர் அணிந்திருந்த மழைக் கவசத்தால் மூடி மோட்டார் சைக்கிளின் முன் பகுதியில் வைத்து கொண்டு வந்ததாகவும் புளியங்குளம் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, பொலிஸார் குறித்த மோட்டார் சைக்கிளையும், தலையையும் கைப்பற்றியதோடு அவரையும் கைது செய்திருந்தனர்.

இதனையடுத்து உயிரிழந்து இறந்த பெண்ணின் கணவன் சுகிர்தரன் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் சின்னப்பூவரசங்குளம் காட்டுப் பகுதிக்குச் சென்ற பொலிஸார் சடலத்தைக் கைப்பற்றி இருந்தனர்.

அந்தப் பகுதிக்குத் தடயவியல் பொலிஸாரும் வருகை தந்து அங்கிருந்த சான்றுப் பொருட்களைச் சேகரித்ததோடு, குறித்த விடயம் தொடர்பாக புளியங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## செம்மணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"செம்மணியில் மனித எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டு வருகின்றமை பல்வேறு சந்தேகங்களையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

அங்கு இதுவரை தோண்டப்பட்ட புதைகுழியில் இருந்த பல்வேறு எலும்பு கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

ஆனாலும், அவை தொடர்பான முழுமையான விவரங்கள் வெளிவரவில்லை.

இவ்வாறான நிலையில் புதைகுழி தோண்டும் பணிகளை இடைநிறுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆனால், அங்கு எலும்பு எச்சங்கள் தொடர்ச்சியாக மீட்கப்பட்டு வருகின்ற நிலையில் இதனைத் தடுத்து நிறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

அதேநேரத்தில் சர்வதேச மேற்பார்வையுடன் சர்வதேச நியமங்களுக்கு அமைய புதைகுழி தோண்டும் பணிகளை முன்னெடுக்க வேண்டும் எனக் கோருகின்றோம்.

இவ்வாறு பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நாளை முன்னெடுக்கப்படுகின்ற இந்தப் போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள், பொதுமக்கள் என அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம்." - என்றுள்ளது.

## வவுனியாவில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு, விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வவுனியா, காத்தார்சின்னக்குளத்தைச் சேர்ந்த 24 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது கொலையா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இளைஞர் குழுவொன்றுடன் மோதலில் ஈடுபட்டார் என்று பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பில் விரிவான விசாரணைகளை முன்னெடுத்து வரும் வவுனியா குற்றப் பிரிவுப் பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் இரண்டு இளைஞர்களிடம் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## உங்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தந்தை செல்வா காட்டிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் வழியில் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வரவேண்டும். நான் அரசியலில் இருந்து ஒதுங்கத் தயார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்து வெற்றிகரமாகச் செயற்பட ஒத்துழைப்பதே தந்தை செல்வாக்கு நீங்கள் செய்யக்கூடிய மரியாதை ஆகும். இறந்துபோன பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு ஆத்மா சாந்தியடையும்." - என்றார்.

# கொழும்பு 5 மாடி கட்டிடத்திலிருந்து விழுந்து ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு - வெள்ளவத்தை இராமகிருஷ்ணா பிளேஸில் உள்ள 5 மாடி கட்டிடத்திலிருந்து விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான இராசையா தவராசா என்பவரே இவ்வாறு உயிரிழந்ததாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த நபர் 3 வருடங்களுக்கு முன்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ணா பிளேஸில் உள்ள ஒரு வர்த்தகரின் வீட்டிற்கு காவலாளியாக வேலைக்கு வந்துள்ளார்.

இன்று (04) காலை மேல் மாடியில் உள்ள நடைபாதைக்கு அருகில் மர கைப்பிடியால் செய்யப்பட்ட சாதனத்தைப் பயன்படுத்தி யன்னல் அடைப்புகளை சுத்தம் செய்யும் போது அவர் கீழே விழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச சபையின் சஜித் கட்சி உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம்





வவுனியா, ஜூன் 4

ஐக்கிய மக்கள் சக்தியின் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட அமைப்பாளர் ரசிக்கா பிரியதர்சினியின் அலுவலகத்தில் வைத்து சட்டத்தரணி முன்னிலையில் இன்று இந்தச் சத்தியப் பிரமாண நிகழ்வு இடம்பெற்றது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபைக்கு நியமன உறுப்பினர்கள் உட்பட 3 ஆசனங்கள் கிடைத்தன. அதில் இரு பெண்களும், ஓர் ஆண் உறுப்பினரும் அடங்குவர். மேற்படி மூன்று உறுப்பினர்களுமே சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்

இதன்போது கட்சியின் வவுனியா மாவட்ட முக்கியஸ்தர் கருணாதாச உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்த இரு இளைஞர்களும் பிணையில் விடுவிப்பு

பருத்தித்துறை, ஜூன் 4

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வளாகத்தினுள் அத்துமீறி நுழைந்து அடாவடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான இரண்டு இளைஞர்களையும் பிணையில் செல்ல பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட தமது நண்பனைப் பார்வையிட வைத்தியசாலையில் பார்வையாளர் நேரம் முடிவடைந்த பின்னர் இரண்டு இளைஞர்களும் சென்றுள்ளனர்.

அவர்களை வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வைத்தியசாலைக்குள் அனுமதிக்காத நிலையில், அவர்களை மீறி உள்நுழைந்துள்ளனர்.

அதனையடுத்து வைத்தியசாலையில் பணியில் இருந்த பொலிஸார் இருவரையும் தடுத்து நிறுத்திய வேளை அவர்களுடனும் முரண்பட்டுள்ளனர். இருவரும் மதுபோதையில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்ட நிலையில், இருவரையும் பொலிஸார் கைது செய்து மேலதிக சட்ட நடவடிக்கைக்காகப் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பருத்தித்துறை பொலிஸார் நீதிவான் நீதிமன்றத்தில் இருவரையும் முற்படுத்திய வேளை இருவர் சார்பிலும் முன்னிலையான சட்டத்தரணியின் பிணை விண்ணப்பத்தை ஏற்ற மன்று, இருவரையும் தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பிணையில் செல்ல அனுமதித்தது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.06.2025 வெளியிடப்பெற்றது.